[1967 நவம்பர் 25

மாநிலத்திலுள்ள சிறைச்சாலைகள்

*443 வினா—திரு. வி. கே. கோதண்டராமன் : மதிப்பிற்குரிய சட்ட கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1952-க்கு பிறகு நமது ராஜ்யத்தில் எத்தனை சப்-ஜெயில்கள், மத்திய சிறைகள் புதிதாக கட்டப்பட்டன, ஜில்லாவாரியாக ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : 1952-ம் ஆண்டிற்கு பிறகு இம் மாநிலத்தில் மத்திய சிறைச்சாலையோ அல்லது மாவட்ட சிறைச் சாலையோ, எதுவும் புதிதாகக் கட்டப்படவில்லை. ஆனால் கன்னியா குமரி மாவட்டம் நாகர்கோயிலில் 1956-ஆம் ஆண்டில் ஒரு சிறிய சிறைச்சாலையும் தக்கலையில் 1962-ம் ஆண்டில் ஒரு சிறிய சிறைச் சாலையும் மட்டுமே கட்டப்பட்டன.

திரு. வி. கே. கோதண்டராமன் : இந்த சிறைச்சாலைகளை, ஏற் கனவே இருந்த சர்க்கார் எந்தெந்த விதத்தில் எல்லாம் சீர்திருத்தி அமைக்கவேண்டுமோ, அதைச் செய்யவில்லையென்று அமைச்சரவர் கள் சொன்னார்கள். இன்றையதினம் வந்திருக்கக்கூடிய இந்த சர்க்காராவது எந்தெந்த விதத்தில் அவற்றை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று உத்தரவிட்டுள்ளது? அல்லது இனிமேல் செய்ய உத்தேசம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மத்திய சிறைச்சாலையில் இட நெருக்கடி இருப்பதாக முடிவு செய்யப்பட்டு பாளையங்கோட்டை சிறையை மத்திய சிறைச்சாலையாக மாற்றும்படி ஒரு ஏற்பாடு செய்திருக்கிறது. அதை விரிவாக்கினால் சிறைச்சாலையில் இருக்கும் இடநெருக்கடி குறையும்; வசதி பெருகும்.

*444 வினா—திரு. வி. கே. கோதண்டராமன் : மதிப்பிற்குரிய சட்ட கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்வி களுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்ட மார்க்கெட் கமிட்டியார் 1959 முதல் திருச்சி சப்-ஜெயில் கட்டடத்தை காலி செய்து தங்களுக்கு கொடுக்க வேண்டுமென்று கேட்டு வருவது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை கள் யாவை ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) திருச்சிராப்பள்ளியில் உள்ள சிறப்புத் துணைச் சிறைச் சாலையை அதன் தற்போதைய இடத்திலிருந்து திருச்சி மத்திய சிறையை அடுத்துள்ள ஓர் இடத்தில் கட்டப்படவிருக்கிற புதிய கட்டிடத்திற்கு மாற்ற முடிவு செய்யப்பட்டுள்ளது. அக் கட்டிடம் கட்டுவதற்கான நிதி ஒப்பளிப்பு இன்னும் வழங்கப்படவில்லை.